செ.வெ.எண்: 46 நாள்: 19.11.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் வட்டத்தைச் சேர்ந்த எல்லை போராட்ட தியாகி அவர்களின் இல்லத்திற்கே சென்று ரூ.1,00,000/-க்கான பொற்கிழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.11.2021) வழங்கி சிறப்பித்தார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் வட்டத்தைச் சேர்ந்த எல்லை போராட்ட தியாகி அவர்களின் இல்லத்திற்கே சென்று ரூ.1,00,000/-க்கான பொற்கிழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.11.2021) வழங்கி சிறப்பித்தார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பெற்ற போது தமிழ்நாடு முழுவதும் எல்லைப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்ற 110 தியாகிகளுக்கு திங்கள்தோறும் ரூ.6,000/- ஓய்வூதியம் வழங்கப்பெற்று வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எல்லைப் போராட்ட தியாகிகளை பெருமைப்படுத்தும் நேர்வாக ரூ.1,00,000/-க்கான பொற்கிழி வழங்கி சிறப்பிக்கப்பெறும் என அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து 01.11.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14 எல்லைப் போராட்டத் தியாகிகளுக்கு சென்னை தலைமைச் செயலகத்தில் பொற்கிழி வழங்கப்பெற்று இத்திட்டம் தொடங்கி வைக்கப்பெற்றது.

அதனடிப்படையில் 19.11.2021 இன்று கீழ்வேளூர் வட்டம் மேட்டுத் தெருவைச் சேர்ந்த எல்லைப் போராட்டத் தியாகி திரு.ந.தங்கவேலு (எல்லைக் காவலர் வயது 86) அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று பொற்கிழியாக ரூ.1,00,000/-க்கான (ரூபாய் ஒரு இலட்சம்) காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் முனைவர்.இரா.அன்பரசி, வருவாய் கோட்டாட்சியர் திரு.இரா.மணிவேலன், கீழ்வேளூர் வட்டாட்சியர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**